விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 295 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 23 புதன்கிழமை (09.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஈஸ்டர் தாக்குதல்
## குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய மற்றும் வழிநடத்தியவர்களுக்கு எதிராக நிச்சயமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத்தீர்மானங் 15

## ரணில் அரசாங்கத்தின் பல திட்டங்கள் இரத்து

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல திட்டங்களை இரத்துச் செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். 16

# ஐ.நா தீர்மானம் ஏற்க முடியாது
## அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்கள் எதனையும் இலங்கை அரசாங்கம் ஏற்காது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள்மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 15

## உலக நாடுகளுடன் இராஜதந்திர உறவில் சமநிலை பேணப்படும்

(கொழும்பு)

இராஜதந்திர உறவுகளில் அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சமமான முறையில் செயற்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் செய்தி 16

## மத்திய கிழக்குப் போர்ச்சூழல்
## நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. உலக சந்தையில் விலை அதிகரித்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கையிலும் எரிபொருள் விலைகளில் மாற்றங்கள் ஏற்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார். 15

## புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப் பணி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடி அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 15

## யாழ்ப்பாணம் அராலியில்
## 10 இலட்சம் ரூபாய் பணத்தை எரித்ததோடு 7 இலட்சத்தை வீதியில் எறிந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலியில் 10 இலட்சம் ரூபாய் பணத்தை தீயிட்டு எரித்ததோடு 7 இலட்சம் ரூபாய் பணத்தை வீதியில் எறிந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அராலிப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நேற்றுக் காலை அவரது வீட்டுக்கு முன்னால் ரூபா 10 இலட்சம் பெறுமதியான பணத்தினை தீயிட்டு எரித்துள்ளார்.

அதன் பின்னர் வட்டுக்கோட்டையில்உள்ள இலங்கை வங்கிக்கு சென்று அங்கிருந்து ஏழு இலட்சம் ரூபாய் பணத்தினை எடுத்து வந்து வீதியில் எறிந்துள் 15

## தமிழ் மக்கள் கூட்டணியில் இளையோர் அணி யாழ்.மாவட்டத்தில் களமிறக்கம்
### முன்னாள் பெண் போராளியும் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீதியரசர் சி. வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் இம்முறை ஆளுமையும் தகுதியும் உள்ள இளையோர்களை கொண்ட அணி யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இறுதிசெய்யப்பட்டுள்ள வேட்பாளர் பட்டியல் இன்றைய தினம் தாக்கல் செய்யப்படும் என்றும் இந்த பட்டியலில் இலங்கைத் தமிழரசுக் கட் 15

## தமிழரசுக் கட்சியின் தெரிவுக்குழு இன்று கூடுகிறது

(வவுனியா )

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தெரிவுக் குழு இன்று கூடு 15

## தபால் மூல விண்ணப்பம்
## ஏற்றுக் கொள்ளும் கால அவகாசம் நீடிப்பு

(கொழும்பு)


பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால எல்லை நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் நிறைவடையவிருந்த நிலையில் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பதில் மாவட்ட செயலாளர் பிரதீபன்

## இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு



யாழ்ப்பாண பதில் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண பதில் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தோற்றி பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் 2024.07.01 ஆந் திகதி தொடக்கம் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# டக்ளஸை சந்தித்த முருகன்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 31 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட முருகன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 31 வருடங்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

முருகன் இலங்கையை சேர்ந்தவர் என்பதால் இலங்கை செல்வதற்கு ஆவணங்கள் இல்லை எனும் காரணத்தால் திருச்சி சிறப்பு முகாமில் சுமார் ஒன்றரை வருட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரை இலங்கைக்கு மீள அழைத்து வர அப்போது கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா சில நடவடிக்கைகளை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இவருடன் கைது செய்யப்பட்ட சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த போதே கடந்த பெப்ரவரி மாதம் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்து இருந்தார். (ம-7,33)

# அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலை அறிவிப்பு

அத்தியாவசியப் பொருட்களின் இந்த வார நிர்ணய விலையை நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

சீனி, கோதுமை மா உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் இந்த வாரத்திற்கான நிர்ணய விலையை நுகர்வோர் விவகார அதிகார சபை ஒவ்வொரு வாரமும் வெளியிடுகின்றது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 237 முதல் 269 ரூபா வரையில் விற்பனை செய்யலாம்.

கோதுமை மா ஒரு கிலோ 149 ரூபா முதல் 177 ரூபா வரையும் 1 கிலோ பருப்பு 270 ரூபாய் முதல் 317 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படலாம்.

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலை கிலோவொன்று 160 முதல் 234 ரூபா வரையும் காய்ந்த மிளகாய் ஒரு கிலோ 685 முதல் 845 வரையும் விற்பனை செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# வாகனங்களை கட்டம் கட்டமாக இறக்குமதி செய்வதற்கு தீர்மானம்

## வாகன இறக்குமதியாளர் சங்க தலைவர்

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எந்தவிதத் தீர்மானமும் மேற்கொள்ளப் படவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி தொடர்பில் பல் வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் எனக் கூறப்படுகிறது.

ஆனால், இதுவரையில் அதற்கான சுற்றறிக்கையோ அல்லது ஆவணமோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

அரசாங்க அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கமைய, வாகன இறக்குமதி தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தினால் எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லை என அறிய முடிகிறது.

வாகன இறக்குமதி கொள்கைக்கு அமைய எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் அனைத்து வகையான வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கான சாத்தியம் காணப்படவில்லை.

முதற்கட்டமாக ஜனவரி மாதம் பேருந்து மற்றும் பாரவூர்திகளை இறக்குமதி செய்து, அந்நியச் செலாவணியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை அவதானித்து அதன் பின்னர் கட்டம் கட்டமாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் இரண்டு வருடங்களுக்குள் அனைத்து வகையான வாகனங்களையும் நாட்டுக்கு இறக்குமதி செய்யும் வகையிலேயே திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், வாகன இறக்குமதி தொடர்பில் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புகளும் இதுவரை வெளியிடப்படவில்லை.

நாட்டின் தற்போதைய நிலையில், எதிர்வரும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து வகையான வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிப்பது சாத்தியமற்றது என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 09 - 1948



மறைவு 08 - 10 - 2024

## அமுதலிங்கம் சிவமணி

சிவன் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமுதலிங்கம் சிவமணி அவர்கள் 08.10.2024 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அமுதலிங்கம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், கொக்குவில்) அவர்களின் அன்பு மனைவியும் அமுதினி, அனுசினி ஆகியோரின் அன்புத் தாயும் கிருபாகரன் மற்றும் சந்திரகுமாரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற துரைராசா, பஞ்சலிங்கம், சிவராணி, தேவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, தட்சிணாமூர்த்தி மற்றும் தனபாலசிங்கம், மீனாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜிதனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.10.2024 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி, கோண்டாவில். மகள் : 075 940 6906 மருமகன் (சந்து) : 077 351 2647 குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி தயாநிதி ஜீவகுமார்
(SLPS - I, B.A, PGDE)
(யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை)

ஆசிரியர் சேவையில்
01.03.1993 முதல் 12.10.2013 வரை
அதிபர் சேவையில்
13.10.2013 முதல் 08.10.2024 வரை



யா/மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராக சேவையாற்றி 09.10.2024 (இன்று) மணிவிழாக் காணும் அதிபருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதோடு ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.


வாழ்த்துவோர்:
தென்மராட்சி அதிபர்கள் சங்கம்
(C-1361)

# பொருளாதார அபிவிருத்திக்கு உதவத் தயார்

## இலங்கைக்கு உறுதியளித்த அமெரிக்கா

**(கொழும்பு)**

**இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்த தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாரென அமெரிக்கா உறுதியளித்துள்ளது.**



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியினையும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி முகவர் நிலையத்தின் (USAID) ஊடாக நிதி உதவிகளை வழங்கத் தயாரெனவும் தூதுவர் இதன்போது தெரிவித்தார். ஊழல் மோசடிகளை மட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு அமெரிக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

சிறந்த அரச நிர்வாகத்திற்காக வழங்கக்கூடிய எந்தவொரு உதவியையும் வழங்குவதோடு பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கான உதவிகளை வழங்கவும் இணக்கம் தெரிவித்ததுடன் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குதல் மற்றும் கிராமங்களின் வறுமையை ஒழிப்பதற்காக புதிய ஜனாதிபதியால் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்க தூதுவர் உறுதியளித்தார்.

தற்போது செயற்படுத்தப்படும் கிராமிய பாடசாலைகளின் பகல் உணவு வேலைத்திட்டத்தை நகர பாடசாலைகளிலும் வழங்கவிருப்பதாகவும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார். (நி)

## ஆட்பதிவு ஆணையாளர் நாயகமாக சூரியப்பெரும

(கொழும்பு)

ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பதவிக்கு பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் எம்.எஸ்.பீ. சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைவாகவே அமைச்சரவை குறித்த அங்கீகாரத்தை வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (நி)

## மதுவரி திணைக்களத்துக்கு புதிய ஆணையாளர்

(கொழும்பு)

மதுவரி திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக யு.டி.என் ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக கடமையாற்றிய எம்.ஜே.குணசிறியின் பதவிக்காலம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து, பதில் மதுவரி ஆணையாளர் நாயகமாக யு.டி.என் ஜயவீரவை நியமிக்க நிதியமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (நி)

## திங்கள் முதல் உரமானியம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

நெல் விவசாயிகளுக்கான 25,000 ரூபா உர மானியம் வழங்கும் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "பெரும் போகம் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த வாரம் திங்கட்கிழமைக்குள் இந்த உர மானியம் அம்பாறை மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும். அதன் பின்னர் பொலன்னறுவை, அநுராதபுரம், மஹியங்கனை மற்றும் மகாவலி பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு இதனை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்" இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (நி)

## பிரிக்ஸ் அமைப்பில் இணைய தீவிரமாக முயலும் இலங்கை

(கொழும்பு)

பிரிக்ஸ் பொருளாதாரக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை தீவிரமாக முயன்று வருவதோடு இந்த விடயத்தில் ஆதரவு வழங்குமாறு இந்தியாவுக்கு முறையான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அமைச்சர் ஊடகவியலாளர் சந்திப்பில் உறுதிப்படுத்தியுள்ளார்.

உலகளாவிய பொருளாதார நிலப்பரப்பிற்குள் தனது நிலையை வலுப்படுத்த இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை இந்த நடவடிக்கை குறிக்கிறது.

2024 ஒக்டோபர் 22 முதல் 24 வரை நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஹேரத் கூறியுள்ளார்.

2024ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைவர் பதவியை ரஷ்யா வைத்திருக்கும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், இதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதைய தேர்தல் காலம் காரணமாக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என்று அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

உச்சிமாநாட்டில் இலங்கையின் பங்கேற்பு முக்கியமானது, ஆனால் பிரதிநிதித்துவங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்காவை உள்ளடக்கிய வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் அமைப்பான பிரிக்ஸ் வட அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவில் உள்ள செல்வந்த நாடுகளின் பொருளாதார மேலாதிக்கத்தை சவால் செய்யும் வகையில் நிறுவப்பட்டது.

அத்துடன், எகிப்து, ஈரான், எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய புதிய உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இந்த பிரிக்ஸ் அமைப்பு அண்மையில் விரிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இலங்கை வரும் சீன போர்க் கப்பல்

(கொழும்பு)

இலங்கை அனைத்து நாடுகளுடனும் சமமான இராஜ தந்திர உறவைப் பேணும் எந்த நாட்டிற்கும் விசேட சலுகையையோ முக்கியத்துவத்தையோ வழங்காது என வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் எப்படி ஈடுபாட்டை பேணுகின்றோமோ அதுபோலவே சீனாவுடன் ஈடுபாட்டை கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் சீன இராணுவத்தின் பயிற்சி கப்பலை இலங்கைக்குள் அனுமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமைக்கான நோக்கம் குறித்து கருத்து தெரிவித்துள்ள விஜித ஹேரத், இது நாட்டின் இராஜதந்திர ஈடுபாட்டின் கட்டமைப்பை மீறாத விடயம்.

இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளது. நாங்கள் எந்த நாடும் விசேடமானது எனக் கருதவில்லை, பெரிய நாடாகயிருந்தாலும் சரி சிறிய நாடாகயிருந்தாலும் சரி அவற்றுடன் இலங்கை இராஜதந்திர உறவுகளைப் பேணுகின்றது, எங்கள் அணுகுமுறையில் பக்கச்சார்பு இருக்காது என அமைச்சர் தெரிவித்துள்ளார். வழமையான இராஜதந்திர பரிமாற்றங்களின் ஒரு பகுதியாக பல நாடுகளின் போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# தென்னாபிரிக்காவை பந்தாடியது அயர்லாந்து



தென்ஆப்பிரிக்கா- அயர்லாந்து அணிகளுக்கு இடையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. ஏற்கனவே முடிவடைந்த முதல் இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இந்த நிலையில் அபுதாபியில் 3 ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் பட்டிங் செய்த அயர்லாந்து 284 ரன்கள் குவித்தது. அந்த அணியின் தொடக்க வீரர் கள் பால்பிரைன் 45 ரன்களும், பால் ஸ்டிர்லிங் 88 ரன்களும் விளாசினார். ஹாரி டெக்டர் 48 பந்தில் 60 ரன்கள் சேர்த்தார். தென்னாபிரிக்கா அணி சார்பில் லிசாட் வில்லியம்ஸ் அதிக பட்சமாக 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 285 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா அணி களம் இறங்கியது. முதல் மூன்று வீரர்களும் ஒற்றை இலக்க ரன்னுடன் வெளியேறினர்.

ரியான் ரிக்கெல்டன் 4 ரன்னிலும், ஹென்றிக்ஸ் 1 ரன்னி லும், வான் டெர் டுஸ்சன் 3 ரன்னிலும் வெளியேறினார்.

அதன்பின் தென்னாபிரிக்கா அணியால் சரிவில் இருந்து மீள முடியவில்லை. ஜேசன் ஸ்மித் மட்டும் தாக்குப்பிடித்து விளையாடினார்.

அவர் 93 பந்தில் 91 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா 46.1 ஓவரில் 215 ரன்னில் ஓல்அவுட் ஆனது. இதனால் அயர்லாந்து 69 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அயர்லாந்து பந்து வீச்சாளர்கள் கிரஹாம் ஹூம், கிரேக் யங் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். 88 ரன்கள் அடித்த பால் ஸ்டிர்லிங் ஆட்டநாயகன் விருது வென்றார். தென்னாபிரிக்கா பந்து வீச்சாளர் வில்லியம்ஸ் தொடர் நாயகன் விருது வென்றார். இதற்கு முன்னதாக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட ரி-20 தொட ரில் அயர்லாந்து ஒரு போட்டியில் வெற்றி பெற்றது. மொத்தமாக ஐந்து போட்டிகளில் 2 இல் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (நி)

# பருத்தித்துறை பிரதேச செயலக அணி வெற்றி

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகத்தினால் வடமாராட்சிக் குட்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான துடுப்பாட்டப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஆறு விக்கட்டுக்களால் கரவெட்டி பிரதேச செயலக அணியை வீழ்த்தி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி பிரதேச செயலக அணி ஆறு ஓவர்கள் முடிவில் இரண்டு விக்கட்டுக்களை இழந்து 57ஓட்டங்களை பெற்றது.இதில் கஜீவன் 25 ஓட்டங்களையும் நிரோஜன் 13 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக அணிவீரர் நிஷாந்தன் ஒரு விக்கெட்டினை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி 5 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப்பெற்று வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக பருத்தித்துறை பிரதேச செயலக அணியை சேர்ந்த நந்தனும் சிறந்த பந்துவீச்சாளராக கரவெட்டி பிரதேச செயலக அணியை சேர்ந்த ரமேஸூம் தெரிவுசெய்யப்பட்டனர். ஆட்ட நாயகனாக பருத்தித்துறை பிரதேச செயலக அணியை சேர்ந்த மிதுலன் தெரிவு செய்யப்பட்டார். (ம-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3239

சுசில்





ரதித்தா




லோகேஷ்




பிறேம்




ராகவ்




சஞ்சீவன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு பொறிமுறை மூலமே தீர்வு!

## ஐ.நாவின் தீர்மானத்தை நிராகரிக்கும் அரசாங்கம்

(கொழும்பு)

**இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பிலான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51இன் கீழ் முதலாம் இலக்கத் தீர்மானத்தை நிராகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

எனினும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வை காண அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.


ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், 2024 செப்டெம்பர் 9 ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதி வரை ஜெனிவா நகரில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடருக்கு அமைவாக, வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சமர்ப்பித்த விடயங்கள் அமைச்சரவையின் கவனத்திற்கு எடுக்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சமகாலக் கூட்டத்தொடரில் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணை வரைபை இலங்கை நிராகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 இன் கீழ் முதலாம் இலக்கத் தீர்மானத்திற்கு இலங்கை தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருவதுடன் சாட்சிகளைத் திரட்டும் பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கின்ற எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படாதிருக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த தீர்மானத்தை நிராகரித்திருந்தாலும், உள்நாட்டுச் செயன்முறை மூலம் நல்லிணக்கம் உள்ளிட்ட முக்கிய மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



# முத்திரைகளை ஒப்படைக்குமாறு முன்னாள் எம்.பிகளுக்கு கோரிக்கை

## தபால் திணைக்களம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட இலவச முத்திரைகளை அருகில் உள்ள தபால் திணைக்களத்தில் அல்லது பாராளுமன்றத்தில் ஒப்படைக்குமாறு தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் அந்த முத்திரைகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதால் அவற்றை அருகிலுள்ள தபால் அலுவலகம் அல்லது பாராளுமன்றத் திற்கு திருப்பி அனுப்புமாறு தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் மா அதிபர், முத்திரைகளை செல்லாதவையாக கருதுமாறு நாட்டில் உள்ள அனைத்து தபால் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு வருடாந்தம் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான முத்திரைகள் இலவசமாக வழங்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சகல வசதிகளும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இலங்கையில் அதிகரித்த எச்.ஐ.வி தொற்றாளர்கள்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இவ்வருடம் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களின் துரித அதிகரிப்பு குறித்து சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்ட பால்வினை நோய் தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரி ஒருவர் அம்பலாங்கொடை பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்ற மருத்துவ சிகிச்சை முகாமின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனை தெரிவித்தார்.

மாவட்டத்தில் இவ்வருடம் 21 எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இன்னும் அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் இருக்கக் கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மொத்தமாக 87 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் சூரியவெவ மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், தெரிவித்தார்.

எச்.ஐ.வி ஒரு குணப்படுத்த இயலாத நோயல்ல என்றும் அது எயிட்ஸ் நிலைக்கு வளரும் முன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியும் என்றும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

09.10.2024
புரட்டாதி 23, புதன்கிழமை
சஷ்டி முற்பகல் 8.16 மணிவரை

மூலம் பின்னிரவு 2.03 மணிவரை
சுபநேரம் -4.32-6.02 மணிவரை
இராகுகாலம் -12.02-1.32 மணிவரை
சரஸ்வதி பூசை ஆரம்பம்

சந்திராஷ்டமம்.
பரணி கார்த்திகை.

வளவன்



**மேஷம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**ரிஷபம்** குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.



**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகும் வாய்ப்புண்டு.



**கடகம்** உறவினர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புண்டு.



**சிம்மம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**கன்னி** கடன் சுமை குறையும் நாள், இல்லத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள் போசன சுகமுண்டு.



**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.



**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.



**தனுசு** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல்நலனில் கவனம் தேவை, சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.



**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.



**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், கௌரவமான நாள்.



**மீனம்** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**உறுதியுள்ளவன் உலகை தனக்கு வேண்டிய முறையில் அமைத்துக் கொள்கிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு பட்டியலின்றி கண்புரை சத்திரசிகிச்சை

## வைத்திய நிபுணர் மலரவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் காத்திருப்பு பட்டியல் இன்றி கண்புரை சத்திரசிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், 10 நாட்களுக்கு 2ஆயிரம் கண்புரை சத்திரசிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ் . போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் எம். மலரவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச பார்வை தினத்தினை முன்னிட்டு, யாழ் . போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவில் 2 ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை செய்யவுள்ளோம். யாழ்.போதனா வைத்தியசாலையில் குறுகிய காலத்தில் கண்புரை சத்திர சிகிச்சை முகாமை நடத்துவது இது மூன்றாவது தடவை. வடமாகாணத்தில் இது நான்காவது தடவையாகும்.

எனவே வடமாகாணத்தில் வசிக்கும் அனைத்து மக்கள் ஆகிய உங்களுக்கு கண்புரை அல்லது பார்வை குறைப்பாடுகள் இருப்பதாக உணர்ந்தால் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திற்கோ அல்லது தள வைத்தியசாலைக்கோ அல்லது மாவட்ட வைத்தியசாலைக்கோ சென்று கண்களை பரிசோதித்து கண்புரை சத்திர சிகிச்சை செய்ய் வேண்டும் எனில் காத்திருப்பு காலம் இன்றி செய்ய கூடியவாறாக இருக்கும் என தெரிவித்தார். (நி-33)

# தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் யாழ்.மாவட்ட செயலருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனை, நேற்று மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் தற்போதைய வேட்புமனு கையேற்றல் தொடர்பாகவும், எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்கள் தொடர்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் தேர்தல்கள் திணைக்கத்தின் பிரதி ஆணையாளர் எஸ். அச்சுதனும் கலந்து கொண்டார். (நி-33)

# இலவச யோகா கலை பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

உலக சமாதான ஆலயத்தின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகா பயிற்சி வகுப்புக்கள், யா/இனுவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகிறது.

இந்த பயிற்சி வகுப்பு பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5 மணிமுதல் 6 மணி வரை நடைபெறவுள்ளன. தொடர்ந்து நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்புகளில், யோகக்கலை பற்றிய விளக்கமும், நோய்கள் குணமாக என்னென்ன யோகாசனங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் யோகக் கலையுடன் தியானப் பயிற்சியினை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவான விளக்கங்கள் வழங்கப்படும். யோகாப்பயிற்சிகளை கலாநிதி பா.சுதாகரன் வழங்கவுள்ளார். இந்தப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று மாதப்பயிற்சி நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள நாட்டமுள்ளவர்கள் 077 960 3001, 076 023 3301 எனும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

# மாணவர்களுக்கான இலவச பேருந்து சேவை

(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் வறுமைக் கோட்டிலுள்ள மாணவர்களுக்கான இலவச பேருந்து சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இந்த பேருந்து சேவையானது காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் பாடசாலை முடிவடைந்ததும் மாணவர்களை அவர்களின் கிராமங்களில் விடுவதாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இச் சேவை குஞ்சர் கடை, மண்டான், சோழங்கன், அண்ணா சிலையடி, கரணவாய் தெற்கு, கரணவாய் ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-60)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2025 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கைநெறிகள் 01.01.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல்தொடர்பாடல்தொழில் நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர்,கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனிபட வடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவு சேவை உணவு வழங்குநர் போன்ற கற்கை நெறிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ -4) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 25.10.2024ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினை பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9307. தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அதன் பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

# பிரதான எதிர்க்கட்சியாக செயற்பட சந்தர்ப்பம் வழங்குங்கள்-கம்மன்பில

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சர்வஜன சக்தி கூட்டணி பதக்கம் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் பிரதான எதிர்க்கட்சியாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் பதவிக்கு தேசிய மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இரண்டு கட்சிகளால் தெரிவு செய்யப்பட்டால் நாடு ஸ்திரமற்றதாக



இருக்கும் எனவும் உதயகம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முறை தங்கப்பதக்கத்தை எதிர்பார்க்கவில்லை. வெள்ளிப் பதக்கம். ஏனென்றால் பிரதமர் திசைகாட்டிக்கு செல்ல வேண்டும். ஜனாதிபதி பதவியும் பிரதமர் பதவியும் இரண்டு கட்சிகளுக்கு சென்றால் நாடு ஸ்திரமற்றதாகிவிடும்.

முக்கிய எதிர்க்கட்சியின் பங்கை நாங்கள் மக்களிடம் இருந்து கோருகிறோம் எனவும் தெரிவித்தார். (நி)

# ராஜபக்ஷக்களுக்கு எதிரான ஊழல் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த காலத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்திய ராஜபக்ஷக்களுக்கு எதிரான அனைத்து ஊழல் மற்றும் மோசடி வழக்குகள் தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விபரங்கள் இன்னும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், விசாரணைகளின் தீவிரம் தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள ஆவலையும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS-(IFB-04)

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by **IFB 04 for Construction of Rasarikkulam Drainage Retaining Wall, Jaffna.** Please see the above mentioned Invitation for Bids (IFB-04) in **Daily News dated 08.10.2024** or on Jaffna District Secretariat **website www.jaffna.dist.gov.lk**

(C-1350)

**Chairman, Department Procurement Committee, District Secretariat, Jaffna**


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தகவல்களுக்கு அமைவாக அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி முறையே 288.96 ரூபாவாகவும், 298.03 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி முறையே 289.57 ரூபாவாகவும், 298.68 ரூபாவாகவும் உள்ளது. (நி)


## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம்-யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 11.11.2024 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 12.11.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம். |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்தி வைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல:- 021 222 2601, 021 222 2602

(சி-1357)

PEOPLE'S BANK Pride of the Nation



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 32
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: CIMA, Assistant Manager(pvt)
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்
தொ.இ: B/14810

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி
10 இல் சூரி செவ்
கி.பா: 10
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Diploma Completed, Degree Following, Restaurant Manager
எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண்
தொ.இ: B/14812

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
8 இல் செவ் கி.பா: 64
உயரம்:5'5"
தகைமை/தொழில்: O/L, ஐம்பொன் சிலை செய்பவர்
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/14814

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
7 இல் செவ்
கி.பா: 43 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BE
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் (பிள்ளைகள் இல்லாதவர்கள்)
தொ.இ: G/14826

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
12 இல் சூரி செவ்
கி.பா: 28 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc(QS), Cost Estimater(work from Home)
எதிர்பார்ப்பு: பட்டதாரி, உயர்பதவி
தொ.இ: G/14827

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 15
உயரம்:5'2"
தகைமை/தொழில்: Bsc(Hons)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/14828

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்

விஜயதசமி பூசையும், ஏடு தொடக்குதலும் புதிய மாணவர்களைப் பதிவு செய்தலும் : 12.10.2024 சனிக்கிழமை காலை 8.30 மணி

2+ Play Groups, 3+ Montessori, 4+ Pre School சிறுவர்களுக்கு உகந்த மிகப் பாதுகாப்பான சூழலில், சுதந்திரத்துடன் கூடிய மகிழ்ச்சிகரமான விளையாட்டு-அழகியல் வழிக் கற்றலும் குழந்தைகள் காப்பக சேவையும்





"களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கை வரை பயிற்சி பெற்ற ஆசிரிய அம்மாக்களின் அரவணைப்பு, அர்ப்பணிப்பு"

ஆடல், பாடல், விளையாட்டு, கற்றல் வட்டங்கள், மணல்-நீர் விளையாட்டு, தசை நார் பயிற்சிகள், மொழித்தேர்ச்சி, முன் கணிதம் என்பவற்றினூடு ஆரம்பக்கல்விப் பாடசாலைக்குச் செல்வதற்கான அனைத்துத் தேர்ச்சிகளும் வழங்கப்படுகின்றன.

கலாநிதி.பா.தனபாலன்
நிபுணத்துவ ஆலோசகர்

திருமதி. கர்ணி தனபாலன்
பணிப்பாளர்
T.P- 076 848 5213

12.10.2024 சனிக்கிழமை விஜயதசமி அன்று காலை 8.30 மணிக்கு கலாநிதி.பா.தனபாலன் அவர்களால் ஏடு தொடக்கப்படும். உரியவர்கள் தொலைபேசியூடாக முற்கூட்டியே பதிவு செய்யவும்.

"கல்விச் சேவையே கடவுள் சேவை"

இல.528 பலாலி வீதி, திருநெல்வேலி.


## தேசிய மக்கள் சக்திக்கு வாசுவின் கட்சி ஆதரவு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வாசுதேவ நாணயக்கார இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் எங்கள் கட்சி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். நாங்கள் தேர்தலில் போட்டியிடும் அதேவேளை அவர்களிற்கு ஆதரவளிப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)


### லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974



### வைத்தியம்


வலிப்பு நோய் | கை விறைப்பு |
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஹமாஸ் மீண்டும் பீனிக்ஸ் போல் மீண்டெழும்

### நாடு கடந்த தலைவர் தெரிவிப்பு



(ஜெருசலேம்)

ஹமாஸ் அமைப்பு பீனிக்ஸ் பறவை போல சாம்பலில் இருந்து மீண்டும் உயிர்த்தெழும் என நாடு கடந்து வாழும் அதன் தலைவர்களில் ஒருவரான காலிட்மெசெல் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுடனான கடந்த ஒரு வருடகால யுத்தத்தின் போது பலத்த இழப்புகளை ஹமாஸ் சந்தித்துள்ள போதிலும் அந்த அமைப்பு புதிய போராளிகளை சேர்த்து வருகின்றது. ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றது

அத்துடன் நெதன்யாகு அரசாங்கம் அதிகாரத்திலிருக்கும் வரை சமாதானத்திற்கான வாய்ப்புகள் இல்லை என தெரிவித்துள்ள அவர் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு காணப்படும் வரை மத்திய கிழக்கு எந்த நேரத்திலும் வெடிக்கக் கூடிய குண்டு போல காணப்படும் என அவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் மற்றுமொரு தளபதி பலி

(ஜெருசலேம்)

பெய்ரூட்டில் நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் தளவாடத் தலைமையகத்தின் தளபதி சுஹைல் ஹுசைன் ஹுசைனி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

அவர் குழுவின் உயர் மட்ட இராணுவ அமைப்பான ஹிஸ்புல்லாவின் ஜிஹாத் சபையின் உறுப்பினராகவும் இருந்தார்.

ஈரானுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான ஆயுதப் பரிமாற்றங்களில் ஹுசைனி முக்கிய பங்கு வகித்தார்.

மேலும் இந்த ஆயுதங்களின் போக்குவரத்து மற்றும் ஒதுக்கீடு ஆகிய இரண்டையும் மேற்பார்வையிட்டு. மேம்பட்ட ஆயுதங்களை ஹிஸ்புல்லாவின் பிரிவுகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பாளராகவும் அவர் இருந்ததாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

தெற்கு லெபனானில் நேற்று முன்தினம் 120 இலக்குகள் மீது 100 இற்கும் மேற்பட்ட விமானங்களைப் பயன்படுத்தி இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தாக்குதல்களை நடத்தி ஒரு நாள் கழித்து இந்த அறிக்கை வந்துள்ளது. (நி)



## போர் மத்திய

(கீவ்)

### மத்தியக்கிழக் மூண்டுள்ள நிலை புடின் ஈரானிய சர்வதேச அரசிய

உலக வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யா தற்போது அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ அமைப்பு நாடு களை எதிர்க்கும் வல்லமையை உக்ரைனுக்கு எதிரான போரின் மூலம் சர்வதேசத்துக்கு எடுத்து ரைத்துள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் மத்தியகிழக்கில் அமெரிக்க ஆதரவு நாடான இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் பாரிய தாக்குதலை

## ஒரு அளவுக்குத் தான் எல்லாம்... அமெரிக்காவை மிரட்டும் வடகொரியா!



(பியாங்யாங்)

தென்கொரியா மற்றும் அமெரிக்கா மீது அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவேன் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார். கொரிய தீபகற்பத்தில் ஒரே நாடாக இருந்த கொரிய சாம்ராஜ்யம் 1910 முதல் 1945 வரை ஜப்பானின் காலனியாக இருந்தது.

இரண்டாம் உலகப் போரில் தோல்வியை ஒப்புக்கொண்டு ஜப்பான் சரணடைந்த பின்னர் அதே வருடத்தில் சுதந்திரம் பெற்ற கொரியா இரண்டாகப் பிரிந்தது. வரலாற்றின் போக்கில் இரண்டு நாடுகளுக்குமிடையேயான பகைமை வளர்ந்து வந்தது. உலகில் இருந்து தன்னை முற்றிலுமாகத் துண்டித்து வாழும் வட கொரியா சமீப காலங்களாக ரஷ்யாவுடன் நெருக்கம் காட்டி வருகிறது. தென் கொரியாவுக்கு குப்பை பலூன்களை அனுப்புவது, எல்லையில் இராணுவ சோதனைகளைச் செய்வது என உலக நாடுகளையும் பயத்திலேயே வட கொரியா வைத்துள்ளது.கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் அணுஆயுத சோதனையை மேற கொண்ட வட கொரியா அதுமுதல் உலகின் அணு ஆயுத சக்தி கொண்ட நாடுகளுள் முக்கியமானதாக மாறியது.

இந்தியா உள்ளிட்ட மற்றைய அணு ஆயுத நாடுகள் மேற்கு நாடுகளுக்கும் கட்டுப்பட்டிருக் கும் நிலையில் வட கொரியா சுதந்திரமாகச் செயற்பட்டு வருவதால் எப்போது என்ன செய்யும் என்று யூகிக்க முடியாமல் மேற்கு நாடுகள் குழம்பிப் போயுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த கிம் ஜாங் உன் மேற்குலகுக்கும் கடந்த காலங்களிலும் அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம் என்று எச்சரிக்கை விடுத திருந்தாலும், தற்போதைய எச்சரிக்கை நவம்பர் 5 வர உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை ஒட்டி வந்துள்ளதால் பதற்றம் அதிகரித்துள்ளது. (நி)

## இயற்பியலுக்க



(ஸ்டார்கோம்)

2024 ஆண் டிற்கான இயற்பிய லுக்கான நோபல் பரிசு இருவருக்கு பகிர்ந்து அளிக் கப்பட்டுள்ளதாக நேற்றுசெவ்வாய்க்கிழமை அறிவிக் கப் பட் டுள் ளது.

இயற்பியல், வேதியியல், மருத் துவம், இலக்கியம், பொருளாதாரம் அமைதி ஆகிய துறைகளில் முக்கிய பங்களிப்பை ஆற்றியவர்களுக்கு அமைதிக்காக பாடுபட்டவர்களுக்கும் ஆண்டு தோறும் நோபல் பரிசு வழங் வழங் கப் பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் பதற்றத்தின் மத்தியிலும் ய கிழக்கிற்கு புடின் விஜயம்!

**ழக்கு போர் காரணமாக பதற்றம் நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் ய ஜனாதிபதியை சந்திக்கவுள்ளமை சியலில் பேசுபொருளாகியுள்ளது.**



ன
கா
ப்பு
ல்ல
ன
க்கு

ணி
க்க
க்கு
லை

தொடுத்துள்ள நிலையில் புடினின் இந்த விஜயம் முக்கிய நகர்வாக பார்க்கப் படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடின் நாளைமறு தினம் வெள் ளிக்கிழமை ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியானை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்த சந்திப்பில் மத்திய கிழக்கின் நிலைமை குறி த்து விவாதிப்பார் என்று ரஷ்ய அரசு செய்தி வெளி யிட்டுள்ளது.

துர்க்மெனிஸ்தானில் இந்த சந்திப்பானது இடம் பெறும் என உறுதிசெய் யப்பட்டுள்ளது.

மேலும், குறித்த நகர்வு இரு தரப்பு விவகாரங் களைப் பற்றி விவாதிப் பதற்கும் நிச்சயமாக, மத் திய கிழக்கில் கடுமையாக மோச மடைந்துள்ள சூழ் நிலையைப் பற்றி விவாதிப் பதற்கும் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது என கருதப்படுகிறது.

ஹிஸ்புல்லாவுக்கு எதி ரான இஸ்ரேலின் கடந்த வார தாக்குதலில் அந்த அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா கொல் லப் பட்டிருந்தார்.

இதற்கு எதிராக ஈரான் பாரிய பதிலடியை இஸ் ரேலை நோக்கி நகர்த்தி யிருந்தது.

இன்றுவரை ஈரானின் தாக்குதலுக்கு இஸ்ரேல் எவ்வித நகர்வையும் முன் னெடுக்காத நிலையில் புடின் ஈரான் ஜனா திபதியை சந்திக்கவுள்ளமை பெரும் எதிர்பார்ப்புகளை தோற்று வித்துள்ளது. (நி)

## ுக்கான நோபல் பரிசு



ற்கான
நோபல்
கிறது
ளதாக
கிழமை
ட் டுள்

வேதி
, இலக்
தாரம்,
துறை
பங்க
வர்களு
பாடுட்
ஆண்டு
் பரிசு
ப் பட்டு

தங்கப்பதக்கம், சான்றிதழ், 10 லட்சம் டொலர் ஆகியவை பரிசாக வழங்கப்படுகின்றன

நிகழாண்டில் இயற் பியலுக்கான நோபல் பரிசு குறித்த அறிவிப்பை நோபல் அமைப்பு நேற்று வெளி யிட்டுள்ளது.

அதன்படி, செயற்கை நரம்பியல் நெட்வொர்க் மூலம் இயந்திர கற்றலை செயற்படுத்தும் கண்டு பிடிப்பிற்காக அமெரிக்க ஜான் ஜெ.ஹாப்ஃபீல்ட் மற்றும் கனடா ஜெஃப்ரி இ.ஹிண்டன் ஆகியோ ருக்கு நோபல் பரிசு அறி விக்கப்பட்டுள்ளது. (நி)

## கம்போடியாவில் சீன இராணுவத்தளம்
### சர்ச்சையை எழுப்பிய செயற்கைக்கோள் படங்கள்

(கம்போடியா)

பீஜிங்கிலிருந்து ஆயிரக் கணக்கான மைல்கள் தொலை வில் உள்ள கடற்படைத் தளத் திலிருந்து எடுக்கப்பட்ட செயற் கைக்கோள் படங்கள், சீனா தனது உலகளாவிய இராணுவ தடயத்தை விரிவுபடுத்துவதை வெளிக்காட்டியுள்ளது.

பிபிசி செய்திச் சேவையால் சேகரிக்கப்பட்ட செயற்கைக் கோள் படங்கள் கம்போடியா வின் தாய்லாந்து வளைகுடா தளத்தில் நிறுத்தப்பட்டுள்ள சீன கடற்படையின் A56 வகை 1,500 தொன் போர்க்கப்பல் களைக் காட்டுகின்றன.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு முழுவதும் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள், கம்போடியாவின் ரீம் கடற் படைத்தளத்தில் நிறுத்தப் பட்டிருந்த சீனக் கடற்படை கப்பல்களை வெளிக்காட்டு கின்றது.

கடற்கரையில் உள்ள மற்ற சீனக் கட்டுமான வசதிகள் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் கடற்படையால் பயன்படுத்தப் படலாம் என்று கருதப்படுகிறது.

எனினும் அத்தகைய க் கூற்றுக்கள் கம்போடிய அர சாங்கத்தால் நிராகரிக்கப்பட் டுள்ளன. அதன் அரசியல மைப்பு எந்தவொரு நிரந்தர வெளிநாட்டு இராணுவ பிரசன் னத்தையும் சட்டவிரோதமாக்கு கிறது என்று வலியுறுத்துகிறது.

சீனர்கள் எங்கள் சொந்த தேசிய பாதுகாப்பிற்காக ரீம் கடற்படை தளத்தை விரிவு படுத்துவதற்கு எங்களுக்கு உதவி வழங்கினர்.

இந்த கடற்படைத் தளம் நிறைவடைந்ததும் மனிதா பிமான மற்றும் பேரிடர் மீட்பு அல்லது கூட்டு இரா ணுவப் பயிற்சிக்காக எந்தவொரு கடற் படையும் அந்த துறைமுகத்தை அணுக முடியும் என்று கம் போடிய அரசாங்கம் கூறியுள் ளது.

எவ்வாறெனினும் வெளி யாகியுள்ள இந்த படங்கள் தற்சமயம் சீனா மீதான அமெ ரிக்காவின் அச்சத்தையும் கவ னத்தையும் ஈர்த்துள்ளது. (நி)

## ரஷ்ய எண்ணெய் நிலையத்தை குறிவைத்து தாக்கியது உக்ரைன்



(கீவ்)

ஆக்கிரமிக்கப்பட்ட கிரி மியன் தீபகற்பத்தின் கடற் கரையில் உள்ள ஒரு பெரிய எண்ணெய் முனையத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக உக்ரைனின் இராணுவம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை அன்று தெரிவித்துள் ளது.

இது ரஷ்யாவின் கட்டுப் பாட்டில் உள்ள எரிசக்தி வசதி களை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் அண்மைய தாக்குதல் ஆகும்.

குடாநாட்டின் மிகப்பெரிய எண்ணெய் பதப்படுத்தும் வசதியான ஃபியோடோசியா முனையத்தின் மீது அந்நாட் டின் ஏவுகணைப் படைகள் ஒரே இரவில் தாக்குதல் நடத்தியதாக கீவில் உள்ள உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் உயிரச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதற்கிடையில் மொஸ்கோ வில் உள்ள ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் உக்ரைனால் ஏவப்பட்ட 21 ஆளில்லா விமானங்களில் 12ஐ ஒரே இரவில் தீபகற்பத்தில் சுட்டு வீழ்த்தியதாக தெரிவித்து ள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலின் விலை விரைவில் அதிகரிக்கும்

## நாமல் கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு உற்பத்தி பாலின் விலை விரைவில் அதிகரிக்கும் என்று அகில இலங்கை விவசாயிகள் சங்க செயலாளர் நாமல் கருணாரத்ன தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் கடந்த அரசாங்கம் பாலின் விலையைக் குறைத்தமை காரணமாக பால் உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டனர்.

இந்நிலையில் உள்ளூர் உற்பத்தி பாலின் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

மிக விரைவில் பசும் பாலின் விலை அதிரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்றும் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறினார் அமரவீர



(கொழும்பு)

முன்னாள் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர கொழும்பு -7 இல் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து நேற்று வெளியேறினார்.

குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க பெண்கள் கல்லூரிக்கு மாற்றுவதற்கு கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்ற பிரேரணையை தற்போதுள்ள அரசாங்கத்திடம் தான் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 160 | 130-160 | 150 |
| உருளைக்கிழங்கு | 150 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 200 | 150-180 | 400 |
| தக்காளி | 250 | 250 | 400 | 220 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 240 | 200 | 150-180 | 200 |
| கோவா | 220 | 300 | 200 | 270 | 300 |
| கரட் | 160 | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 150 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 160 | 200 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 450 | 400-500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 170 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 200 | 300 | 300 | 270 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 200-300 | 280 |
| போஞ்சி | 400 | 500 | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 180 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 130 | 80-130 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 450 | -- | 500 |
| முள்ளங்கி | 120 | 130 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 120 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 236



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# தப்ப முடியுமா?

அடி உதவுறது மாதிரி அண்ணன் தம்பி கூட உதவுறதில்லை என்று ஒரு பழமொழி சொல்லுவது உண்டு. அது எல்லாம் அந்தக் காலத்திலே சரியாக இருந்ததோ என்னமோ இந்தக் காலத்திலேயும் அது சரியாக வராது சார். இந்தக் காலத்தில் எல்லாம் அண்ணன் தம்பியும் உதவுவதில்லை. அடியும் உதவுவது இல்லை.

ஒரு குற்றவாளியை விசாரிக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆள் அடிக்குப் பயந்து கொண்டு உண்மையைச் சொல்லிவிட்டால் பரவாயில்லை. ஆனால் அப்படி எல்லோரும் சொல்லிவிடுவதில்லையே. அதனாலே தான்.வேறு வகையான முயற்சி எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது.

காலம் மாற மாற குற்றவாளிகளும் மாறிக் கொண்டிருக்கிறார்கள். குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முறையும் மாறிக் கொண்டிருக்கிறது.

லண்டனிலே ஒரு லொறியை ஒரு கொள்ளைக் கும்பல் மிகவும் சாமர்த்தியமாகக் கடத்திக் கொண்டு போய்விட்டார்களாம். கடத்திக் கொண்டு போற அளவுக்கு அந்த லொறியிலே என்ன இருந்தது என்றால் 3 லட்சம் பவுண்ட் அதாவது சுமார் 96 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சிகரெட்டுகள் அந்த லொறியில் இருந்ததாம். அதனாலே தான் கடத்திக் கொண்டு போய்விட்டார்கள்.

அதிக தூரத்திற்கு லொறி ஓட்டிக் கொண்டு போய்விட்டார்கள். இனிமேல் பொலிஸால் எங்களை நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியாது என்று உறுதியாக நம்பினார்கள். ஆனால் அந்த உறுதி உடைந்துபோய் விட்டது. எங்கிருந்தோ திடீர் என்று பொலிஸ் வந்து சுற்றி வளைத்துக் கொண்டு போய்விட்டது. சினிமாவில் நடக்கிறமாதிரி.

ஆசாமிகள் எல்லாம் மாட்டிக்கொண்டார்கள். இது எப்படிச் சாத்தியமாகிவிட்டது தெரியுமா? எல்லாம் கம்பியூட்டர் உபயம்.

அந்த லொறியில் ஒரு சிறிய டிரான்ஸ்மீற்றர் இருந்ததாம். லொறியைக் கடத்திக் கொண்டு போனவர்களுக்கு தெரியாது. அந்த டிரான்ஸ்மீற்றர் தொடர்ந்து சிக்னல்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததாம். அதனாலேதான் சுலபமாகப் போய் அவர்களைச் சுற்றிவளைத்துப் பிடிக்க முடிந்ததாம்.

லொறியிலே இது மாதிரி லொறி டிரான்ஸ்மீற்றர் பொருத்தி பயன்படுத்தும் முறை இருக்கே.அதற்கு DataTrack என்று பெயர் சொல்கிறார்கள். இந்த முறையிலே தான். லொறியை உடனே கண்டு பிடித்துமீட்டிருக்கிறார்கள். இந்த முறையை வேறு எந்த வகையிலே உபயோகப்படுத்தலாம் என்று யோசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது எப்படி என்றால் வாகனங்களிலே ஒரு சிறிய கம்பூட்டரைப் பொருத்த வேண்டியது. அது நாடு பூராகவும் உள்ள டிரான்ஸ்மீற்றர்களிலே இருந்து சிக்னல்களை வாங்கிக் கொண்டிருக்கும். வாகனத்திலே இருக்கின்ற கம்பூட்டர் இந்த சிக்னல்களை பயன்படுத்தி ஒரு வரைபிலே லொறி அப்பப்ப இருக்கிற இடத்தை தொடர்ந்து குறிப்பிட்டுக் காட்டிக் கொண்டிருக்கும்.

கேந்திர நிலையங்கள் இந்தத் தகவலை வைத்து வாகனம் எங்கே இருக்கு என்று ஒரு சில விநாடிகளிலே சொல்லிவிடும். இந்த முறையிலே தான் லண்டனிலே கடத்திக் கொண்டிருந்த லொறியை சுலமாகக் கண்டுபிடித்துவிட்டார்கள். இந்தக் கடத்தல் என்கின்ற குற்றம் ஒவ்வொரு ஊரிலே ஒவ்வொரு விதமாக நடக்கும்.

அதை ஒவ்வொரு விதமாகக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்வார்கள். இடத்திற்கு இடம் அது வித்தியாசப்படும். நமது ஊரிலே சின்னச் சின்ன பொருளையெல்லாம். கடத்திக் கொண்டு போய்விடுகிறார்கள் சார். வேறு ஒன்றும் வேண்டாம். ஒரு சின்ன அலுவலகம். அந்த வாசலிலே அட்டன்டர் றியிஸ்ரன் (வருகைப் பதிவேடு) ஒரு மேசை மேலே வைத்திருந்தார்கள்.

அலுவலகத்திற்கு வேலை பார்க்க வருபவர்கள் எல்லாம் அதிலே கையெழுத்துப் போட்டுவிட்டு உள்ளே வர வேண்டும். கையெழுத்துப் போடுவதற்கு வசதியாக அதற்குப் பக்கத்தில் ஒரு பேனா வைத்திருந்தார்கள். கையெழுத்துப் போட்டவுடன் அந்தப் பேனாவை திருப்பி இருந்த இடத்தில் வைத்துவிடுவது தானே மரியாதை. அப்படி வைப்பதில்லை. கையோடு எடுத்துக் கொண்டு போய்விடுவது. இப்படி இந்தப் பேனா கடத்தல் அடிக்கடி நடந்து கொண்டிருந்தது. புதிதாக பேனா வைத்துப்பார்த்தார்கள் கட்டுப்படியாகவில்லை. எனக்குத் தெரிந்த ஒருவர் அந்த அலுவலகத்திற்கு அதிகாரியாக வந்து சேர்ந்தார்.

என்னிடம் இந்த விடயத்தைச் சொன்னார். எல்லோருக்கும் எது எதற்கெல்லாம் யோசனை சொல்கிறீர்களே. இதற்கு ஒரு யோசனை சொல்லுங்கள் என்றார்.

நான் மிகவும் தீவிரமான யோசனை செய்து ஐடியா கொடுத்தேன். இனிமேல் பேனாவை தனியாக வைக்காதீர்கள். அதை ஒரு நூலிலிலே கட்டி அந்த றியிஸ்ரரோட சேர்த்துக் கட்டிவிடுங்கள். நூல் ஸ்ரோங்கா இருக்கட்டும். ஒரு மூலையிலே பேனா இன்னொரு மூலையிலே றெயிஸ்ரர். எப்படி என் ஐடியா என்றேன். பிரம்மாதம் என்றார். அது மாதிரியே செய்து விட்டார். அதன் பின்பு சில நாட்கள் கழித்து அவரைப் பாாத்தேன் எப்படி சேர் என் ஐடியா. சரியா வந்ததா இப்பல்லாம் பேனாவை யாராவது கடத்துறார்களா என்று கேட்டேன். அவர் ஒரு மாதிரியாக என்னை நிமிர்ந்து பார்த்தார். இப்பெல்லாம் யாரும் பேனாவை கடத்துவதில்லை சேர். ஏன் பேனாவிலே கூடவா ட்ரான்ஸ்மீற்றர் வைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு, மோ.சைக்கிள் தீக்கிரை தொடர்பான
# விசாரணையை துரிதப்படுத்துமாறு கோரி ஆசிரியர்களால் போராட்டம் முன்னெடுப்பு



(முல்லைத்தீவு)

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி பாடசாலை ஆசிரியர்களால் கறுப்புப்பட்டி அணிந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி பாடசாலை ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் தங்கியிருந்த வீடும் சில தினங்களுக்கு முன்னர் எரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

எனவே குறித்த விசாரணையை துரிதப்படுத்தி குற்றவாளியை கைது செய்யுமாறும், ஆசிரியருக்கு நியாயமான தீர்வினை வழங்கவேண்டும், தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்து வித்தியானந்தா கல்லூரி பாடசாலை ஆசிரியர்கள் நேற்றுக் காலை 8.00 தொடக்கம் 8.25 வரை பாடசாலை வாயிலில் கையில் கறுப்புப்பட்டி அணிந்து கல்விக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். (நி-299)

# வீதியால் சென்ற மாணவியின் தங்கச் சங்கிலி அறுப்பு
## முள்ளியவளையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை நகர் பகுதியில் வீதியில் வைத்து மாணவி ஒருவரின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் இருந்து முள்ளியவளை நகரிற்கு உயர்தர வகுப்பு ஒன்றிற்காக மாணவி சென்றுள்ளார்.

குறித்த மாணவி வகுப்பினை முடித்து விட்டு பேருந்து நிலையம் நோக்கி நடந்து சென்ற போது முள்ளியவளை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மாணவி கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்து விட்டு தப்பி சென்றுள்ளனர்.

இதனையடுத்து குறித்த மாணவியால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டதனையடுத்து மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-299)

# சிலாவத்தையில் கடை ஒன்று தீக்கிரை தீவிர விசாரணையில் பொலிஸார்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் கடை ஒன்று எரிந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தை சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றும் அதனுடன் இருந்த களஞ்சிய சாலை ஒன்றும் தீயில் எரிந்துள்ளது.

இதன்போது குறித்த வீதி வழியாக சென்ற அரச பேருந்து சாரதியும் அதன் நடத்துனரும் இதனை அவதானித்து விட்டு அயல்வீட்டினரின் உதவியுடன் தீயினை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இருப்பினும் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இது திட்டமிட்ட செயற்பாடா அல்லது மின்னினால் ஏற்பட்ட தீயா என பல கோணங்களில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-299)

# டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்று செவ்வாய்கிழமை கிளிநொச்சி நகரப்புறப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஏ9 பிரதான சாலையை மையமாகக் கொண்ட பகுதிகளை டெங்கு அற்ற சூழலாக மாற்றுவதற்கான சிரமதான வேலைத்திட்டமாக இது முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பல திணைக்களகங்கள் இணைந்து கிளிநொச்சி நகரப்பகுதியின் முக்கியமான நான்கு இடங்களில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

பல்வேறு தரப்பினரும் இணைந்து சிரமதான முறையில் இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன்போது டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களான குப்பைகள், பொலித்தீன் பைகள், வெற்றுப் போத்தல்கள் உள்ளிட்ட நீர் தேங்கக் கூடிய இடங்கள் சிரமதானம் செய்யப்பட்டு பெருமளவான திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு கரைச்சி பிரதேச சபையினரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன.

மேலும் இதன்போது டெங்குத் தாக்கம் தொடர்பாக கருத்துக்கள் அடங்கிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல் என்ற நோக்கில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு துறையினர் விசேட செயற்பாடுகளை பிரதேச செயலர் ரீதியாக தொடர்தும் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-315-316)

# இறங்குதுறை வசதியின்மையால் சிரமத்தின் மத்தியில் பூநகரி மீனவர்கள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் உள்ள கரையோரப் பகுதிகளில் உரிய இறங்குதுறை வசதிகளின்மையால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் கடற்றொழில் உபகரணங்களும் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்

கடற்றொழிலாளர்கள் அதிகம் வாழும் பிரதேசமாக பூநகரி பிரதேசம் காணப்படுகின்றது. குறிப்பாக பூநகரி பிரதேசத்தின் இரணை மாதா நகர், நாச்சிகுடா, இலவன்குடா, பள்ளிக்குடா, கௌதாரி முனை போன்ற கரையோரப் பகுதிகளில் இறங்குதுறைகள் இன்மையால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது குறித்த பிரதேசத்தில் கடற்றொழிலுக்கு பயன்படுத்தும் படகுகளை பாதுகாப்பதிலும் கடற்றொழில் உபகரணங்களை பாதுகாப்பதிலும் பெரும்சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது இறங்குதுறை வசதியின்மையால் பாதுகாப்பான முறையிலே படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் பாதுகாக்க முடியாது இருப்பதாகவும் சுட்டிக்காட்டி உள்ளனர். எனவே தங்களுடைய பிரதேசத்தின் கடற்றொழில் இறங்குதுறைகளை புனரமைத்து தருமாறும் மீன்பிடி துறைகளுக்கான வீதிகளையும் அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-315)

## போதைப் பாவனையால் முட்கொம்பனில்
# 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு
## கிராம மட்ட ஆய்வுகளில் கண்டறிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி முட்கொம்பன் பிரதேசத்தில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போதைப்பொருள் பாவனைகளால் பாதிக்கப்பட்டிருப்பதாக கிராம மட்ட அமைப்புகளின் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி முட்கொம்பன் பிரதேசத்தில் 840 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போதைப் பொருள் பாவனைகளால் நேரடியாக பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது குறித்த பிரதேசத்தில் பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் இணைந்து போதைப்பொருள் ஒழிப்பு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளன.

அந்த வகையில் பூநகரி கல்வி பண்பாட்டு மலர்ச்சி கூடத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டம் மூலமும் குறித்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக குறித்த பிரதேசத்தில் உள்ள 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அந்த குடும்பங்கள் பொருளாதார ரீதியாகவும் நலிவுற்ற குடும்பங்களாக காணப்படுவதுடன் குடும்ப வன்முறைகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 601





மகனே! சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏதோ பெரும் விபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதன் முதல் அறிகுறிதான் இது. நான் அரண்மனைக்கு வெளியே சென்று, என்ன விடயம் என்றும் தெரிந்து வருகிறேன். அதுவரையில் நீ இங்கேயே இரு! என்றாள் அன்னை.

### 22 ஆம் அத்தியாயம் அது என்ன சத்தம்?

ஓடையருகில் வந்ததும் படகில் வீற்றிருந்த அரசிளங்குமாரி குந்தவைதான் என்பதை வந்தியத்தேவன் நன்கு தெரிந்து கொண்டான். ஆழ்வார்க்கடியான் அவ்விடத்தில் நிற்கவே வந்தியத்தேவனும் தயங்கி நின்றான்.

"அப்பனே! ஏன் நிற்கிறாய்! இளைய பிராட்டி வெகு நேரமாய் உனக்காகக் காத்திருக்கிறார். படகில் ஏறியதும் இளவரசர் வந்து விட்டார் பத்திரமாய் இருக்கிறார் என்ற நல்ல சமாசாரத்தை முதலில் சொல்! உன்னுடைய வீரப் பிரதாபங்களை அளந்து கொண்டு வீண்பொழுது போக்காதே! நான் திரும்பிப் போகிறேன். பழையாறையில் இன்றைக்கு நாம் கலவரப் பிசாசை அவிழ்த்து விட்டுவிட்டோம். அதை மறுபடியும் பிடித்துக் கூண்டில் அடைக்க முடியுமா என்று பார்க்கிறேன். உன்னுடைய தடபுடல் சாகஸங்களினால் எத்தனை தொந்தரவுகள் நேரிடுகின்றன? என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிவிட்டு வந்தவழியாக விரைந்து திரும்பிச் சென்றான்.

வந்தியத்தேவன் மனத்தில் ஒரு பெரும் வியப்பு ஏற்பட்டது. இவன் எப்படி எல்லா விபரங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறான்! இத்தனைக்கும் நம்மை ஒரு விவரமும் கேட்கவில்லை! வெறும் ஊகமா? அல்லது எல்லாம் அறிவானா? ஆண்டிகளில் பரம்பரை ஆண்டி என்றும், பஞ்சத்துக்கு ஆண்டி என்றும் இரண்டு வகை உண்டு ஒற்றர்களிலும் அப்படி இரு வகை உண்டு போலும். நான் அவசரத்துக்கு ஒற்றன் ஆனேன் ஆகையால் அடிக்கடி சங்கடத்தை வருவித்துக் கொள்கிறேன். இந்த வைஷ்ணவன், பரம்பரை ஒற்றன்போலும் அதனால் ஒருவிதப் பரபரப்புமில்லாமல் சாவதானமாகத் தன் வேலையைச் செய்து வருகிறான். ஆனால் யாருக்காக இவன் வேலை செய்கிறான்? இவன் தன்னைப் பற்றிக் கூறியதெல்லாம் உண்மை தானா?

இவ்விதம் யோசித்துக் கொண்டே ஓடை நீர்க்கரைக்கு வந்த வந்தியத்தேவன், ஓடத்திலிருந்த இளவரசியின் முகத்தைப் பார்த்தான். ஆழ்வார்க்கடியானை மறந்தான். தான் போய்வந்த காரியத்தை மறந்தான். உலகத்தை மறந்தான்.தன்னையுமே மறந்தான்.

ஆகா, இந்தப் பெண்ணின் முகம் தன்னைவிட்டுச் சிறிது நேரம் கூடப் பிரிந்திருக்கவில்லை. கனவிலும் நனவிலும், புயலிலும் மலையிலும், காட்டிலும் கடல் நடுவிலும் தன்னுடன் தொடர்ந்து வந்தது. ஆயினும் என்ன விந்தை! நேரில் பார்க்கும்போது இந்தப் பெண் முகத்தின் அழகு எதனால் அதிகப்பட்டுக் காண்கிறது! ஏன் தொண்டையை வந்து அடைக்கிறது! நெஞ்சில் ஏன் இந்தப் படபடப்பு?

சுய நினைவு இல்லாமலே வந்தியத்தேவன் தண்ணீரில் சில அடிகள் இறங்கிச் சென்று, ஓடத்தில் ஏறிக்கொண்டான். இளவரசி ஓடக்காரனைப் பார்த்துச் சமிக்ஞை செய்தாள், ஓடம் நகரத் தொடங்கியது. வந்தியத்தேவனுடைய உள்ளமும் ஊஞ்சலாடத் தொடங்கியது.

நிமித்தக்காரா! இளவரசர்களுக்கு மட்டுந்தான் நீ நிமித்தம் சொல்வாயா? எனக்கும் சொல்வாயா? நிமித்தம் எப்படிச் சொல்வாய்? வானத்துக் கிரஹங்களையும், நட்சத்திரங்களையும் பார்த்துச் சொல்வாயா? அல்லது காக்கை, குருவிகளைப் பார்த்துச் சொல்வாயா? கை ரேகை பார்த்துச் சொல்வாயா? முகக்குறி பார்த்துத்தான் சொல்வாய் போலிருக்கிறது. இல்லாவிட்டால், ஏன் என் முகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? இப்படிச் செய்தாயானால் உயர்குலத்துப் பெண்கள் யாரும் உன்னிடம் நிமித்தம் கேட்க முன்வர மாட்டார்கள்!" என்று அரசிளங்குமரி கூறியது வந்தியத்தேவன் செவிகளில் இனிய கிண்கிணி நாதமாகக் கேட்டது.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## பொன் மொழிகள்

- பொறுமையாய் இருங்கள் ஆனால் சோம்பறியாக இருக்காதீர்கள்
  மாத்யூகரின்
- முகத்துக்கு நேராக எப்பொழுதும் புகழ்பவன் நல்ல நண்பனாக இருக்க மாட்டான்
  சாணக்கியன்
- நீ உண்மையைத் தேட விரும்பினால் உன் எதிரியின் வார்த்தையில் அர்த்தம்
  ஜான் பவுல்
- நீ கற்றுக்கொள்ள விரும்பினால் முதலில் நீ நீயாக இரு
  பின்டார்
- சிறு சிறு சம்பவங்களின் தொகுப்புத் தான் வாழ்க்கையின் மொத்த கணக்கு
  சார்லஸ் டிக்கன்ஸ்
- நல்லவனாக இருப்பது இலகு நேர்மையானவனாகஇருப்பது கடினம்
  ரஸ்கின்

பா.[illegible]
யாழ் இந்துக் கல்லூரி.

## புறாவும் எறும்பும்



ஆற்றில் தண்ணீர் குடிப்பதற்காக ஓர் எறும்பு போயிற்று. தண்ணீர் குடிக்கும்போது தவறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டது. அதை ஆறு அடித்துக் கொண்டு போகும் போது ஒரு புறா அதைப் பார்த்தது. எறும்பு மீது இரக்கங்கொண்டு ஒரு சிறு குச்சியை ஒடித்து ஆற்றில் எறும்பு பக்கத்தில் போட்டது. அதில் எறும்பு ஏறி சுகமாய் கரைசேர்ந்தது.

மற்றொருநாள் ஒரு வேடன் அந்தப் புறா மீது அம்பு எய்யக் குறி பார்த்துக்கொண்டிருந்தான். அதைக் கண்ட எறும்பு புறாவுக்கு உதவி செய்ய விரும்பியது. உடனே வேடனின் காலைப் பலமாய்க் கடித்தது. கடியினால் காலை உதறிய வேடறுக்கு குறி தப்பிப் போயிற்று. இதனால் புறா உயிர் தப்பியது.

ச.ஜர்வின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுயமரியாதை எனும் சிம்மாசனத்தில் நிலைத் திருக்க, ஆசைகள் எனும் இருளை திருப்தி எனும் ஒளியால் நிறைப்போம். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் பேரணி வருகிறது தமிழ் மக்களே பள்ளி எழுக!

இம்முறை நடைபெறப்போகும் பாராளு மன்றத் தேர்தலில் வட மாகாணத்தில் போட்டி யிடவிருக்கின்ற கட்சிகள், சுயேட்சைக்குழுக் களைக் கணக்கிடும்போது அதிர்ச்சியடை யாமல் இருக்க முடியாது.

அந்தளவுக்கு எங்கு பார்த்தாலும் சுயேட் சைக்குழுக்களும் அரசியல் கட்சிகளும் தேர் தலில் களமிறங்கத் தயாராகியுள்ளன.

ஆக, இம்முறை நடைபெறுகின்ற பாராளு மன்றத் தேர்தலில் ஒரு பெரும் பேரணிபோல வேட்பாளர்கள் தமிழ் மக்களை நோக்கி வரு வார்கள் என்பது உறுதி.

எனினும் பொதுத் தேர்தல் தொடர்பில் நம் தமிழ் மக்களின் நிலைப்பாடு எப்படியாக இருக்கிறதென்பதை நாடி பிடித்துப் பார்க்க முடியாதளவில் அவர்கள் தேர்தலில் நாட்ட மற்றவர்களாக உள்ளனர்.

இங்குதான் ஒரு பெரும் குழப்பம் ஏற்படு கிறது. அதாவது பொதுவில் தேர்தலில் அதி களவு கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் களமிறங்குகின்றன எனும்போது, அங்கு ஜனநாயகம் செழுமைகண்டுள்ளது என்றும் அந்த மக்கள் தேர்தல் மீது நம்பிக்கையும் கருசனையும் கொண்டுள்ளனர் என்றும் பொருள் கொள்ளப்படும்.

ஆனால் இங்கு அடிப்படை நியமம் மீறப் பட்டு, ஒரு புறநடையான நிகழ்வு முன்னெழுந் துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதாவது மக்கள் தேர்தலில் கருசனை யற்றவர்களாக – பாராளுமன்றப் பதவிக ளால் எமக்கு எந்தப் பயனும் இல்லை என்று கருதுகின்ற வேளை, பொதுத் தேர்தலில் அதிகளவான கட்சிகளும் சுயேட்சைக்குழுக் களும் களமிறங்கும்போதுதான் புறநடைத் தன்மை உணரப்படுகிறது.

பரவாயில்லை. தேர்தலில் போட்டியிடு கின்ற அத்தனை வேட்பாளர்களும் தமக்கு வெற்றி உறுதி என நம்புகிறார்களே அதுதான் இங்கு போற்றப்பட வேண்டிய விடயம்.

ஆம், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஆறு ஆச னங்கள் மட்டுமே உள்ளன.

ஆனாலும் அந்த ஆறு ஆசனங்களில் தங்களுக்கு ஒன்றேனும் கிடைக்குமென நம்புகின்றவர்கள் நூற்றுக்கணக்கைத் தாண்டும்.

கடவுளே! இப்படியொரு கணிப்பை உலகில் வேறு எங்கும் காண முடியாது.

எதுஎவ்வாறாயினும் ஒரு பெரும் தேர்தல் பேரணி வடக்கு மக்களை நோக்கி வருகிறது.

அந்தப் பேரணியை வரவேற்பதற்காக வேனும் எம் தமிழ் மக்கள் பள்ளி எழ வேண்டும்.

பெண்கள், இளைஞர்களுக்கு

# வேட்பாளர்கள் தெரிவில் கணிசமான இடத்தை ஒதுக்குங்கள் ; கபே கோரிக்கை

(கொழும்பு)

பல ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வரும் மூத்த அரசியல் வாதிகள் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவ தில்லை என முடிவு செய் துள்ளனர்.

எனவே, ஒவ்வொரு அரசியல் கட்சி யிலிருந்தும் வேட்புமனுக் களை கையளிக்கும் போது பெண்கள் மற்றும் இளை ஞர்களுக்கு கணிசமான இடத்தை வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சி களிடமும் கபே அமைப்பு கோரிக்கை விடுத்துள் ளது.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சிலர் மக்கள் பிரதிநிதி கள் என்ற வகையில்தமது கடமையை சரியாக செய்யவில்லை என்பதை அவதானித்துள்ளோம்.

மேலும்,மக்கள் அந் தந்த கட்சியால் வேட்பு மனுவில் தேர்ந்தெடுக் கப்பட்ட நபர்களுக்கு மக்கள் தங்கள் விருப் பத்தை தெரிவிக்கின்ற னர்.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளும் தமது கட்சிப் பிரதிநிதி களைத் தெரிவு செய்யும் போது பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டவர் களைத் தெரிவு செய்யாமல் இளை ஞர்களுக்கும் பெண்களு க்கும் கணிசமான வாய் ப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென கபே அமைப்பின் நிர் வாகப் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ச அவர் கள் கேட்டுக்கொள் கிறார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் திங் கட்கிழமை (07) வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள துடன் தொடர்ந்தும் குறி த்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது,

இந்நாட்டில் பெரும் பான்மையான வாக்கா ளர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் குறிப் பாக அவ்வீதம் நீண்ட காலமாக 50% முதல் 52% வரையில் காணப் படுகிறது.

ஆனால், இந்நாட்டு வரலாற்றில் பெண் களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் 6 வீதத் தினை விட அதிகரிக் காமல் இருப்பது வருத் தமளிக்கிறது. இதன் கார ணமாக ஜன நாயகத்தை மதிக்கும் அனைத்து அர சியல் கட்சிகளும் இம்முறை பாராளுமன் றத் தேர்தலில் பெண் களின் பிரதிநிதித்த வத்தை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென கபே அமைப்பு கேட்டுக்கொள் கின்றது. (ம-7)

நீர் கொழும்பில்

## மதுபானத்துடன் சந்தேகநபர் கைது

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலு பொத்த பகுதியில் சட்ட விரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள தாக நீர்கொழும்பு பொலி ஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலி ஸாருக்கு கிடைத்த தக வலின் பேரில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப் பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 44 வயது டைய நீர்கொழும்பு, தலு பொத்த பகுதியைச் சேர்ந் தவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 57 லீற்றர் 750 மில்லி லீற்றர் சட்டவிரோத மது பானம் கைப்பற்றப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை நீர்கொழும்பு பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## மரக்கிளை வெட்டமுயன்றவர் மின்சாரம் தாக்கி மரணம்

பிலியந்தலை, மடபாத்த பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந் துள்ளதாக கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்த னர்.

அநுராதபுரம், யசசிறி புர பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொரு வரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

உயிரிழந்த நபரின் சகோ தரி கடந்த சில நாட்களு க்கு முன்னர் வீட்டின் குளி யலறையில் தவறி விழு ந்து காயமடைந்து சிகிச் சைக்காக களுபோவில வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனால், உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் இணைந்து, வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ள சகோதரியை சந்திப்பதற்காக பிலியந் தலை, மடபாத்த பிரதேசத் திற்கு சென்றுள்ளார்.

இதன்போது, உயிரி ழந்த நபர் தனது சகோ தரியின் வீட்டிற்குச் சென்று ள்ள நிலையில் வீட்டின் பின்புறத்தில் இருந்த மரத் தின் கிளைகளை வெட்ட முயன்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ள தாக பொலிஸார் தெரிவித் தனர். (ம-7)

## 53 தொலைபேசிகள் காலி சிறையில் மீட்பு

காலி சிறைச்சாலை யில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நட வடிக்கையில் கையடக் கத் தொலைபேசிகள் மற் றும் கையடக்கத் தொலை பேசி துணைக் கருவி கள் மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

காலி சிறைச்சாலை யின் அவசரகால புல னாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக் கையின் போதே இந்த ப்பொருட்கள் மீட்கப்பட் டுள்ளன.

இந்த சோதனையின் போது, 53 கையடக்கத் தொலைபேசிகள், சார் ஜர்கள், பேட்டரிகள் மற்றும் பல கையடக்கத் தொலை பேசித் துணைக் கருவி கள் என்பன மீட்கப்பட்டு ள்ளன.

சோதனை நடவடிக் கையின் போது, சில கைதி கள் தங்களிடம் இருந்த கையடக்கத் தொலை பேசிகளைச் சிறைக் கூண்டுகளின் ஜன்னல் கள் வழியாக வெளியே வீசியதாகவும் தெரிவிக்க ப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் சிறைக் கூண்டுகளின் சுவர்கள், பாய்கள் மற்றும் தலை யணைகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டி ருந்ததாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. (ம-7)

## இலங்கை - ரஷ்யா சுங்க ஒப்பந்தம்

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கும் இடை யிலான சுங்க நடவடிக் கைகள் தொடர்பான ஒத் துழைப்பு மற்றும் பரஸ்பர நிர்வாக உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற ஒப்பந்தத்திற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங் கியது.

இரு நாடுகளுக்கிடை யில் காணப்படும் வர்த் தகத் தொடர்புகள் மூலம் உரித்தாகின்ற நன்மை கள் மற்றும் இருதரப்பு சுங்க ஒத்துழைப்புக்களில் மேலெழுந்துவரும்போக்கு களைக் கருத்தில் கொண்டு, குறித்த ஒப்பந்தத்தில் கையொப் பமிடுவதற்காக நிதி, பொருளாதார அபிவிரு த்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்று லாத்துறை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோச னைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியு ள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I


**கலாநிதி க.தவலிங்கம்**

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


01

எமது நாட்டின் வரலாற்றில் பாராளுமன்றத்தின் அல்லது சட்டமன்றத்தின் அமைவும் வாக்குரிமையும் இன்றும் மிக முக்கியமானதொன்றாகும். எமது நாடு 1505 - 1658 வரை போர்த்துகேயரினாலும் 1658 - 1796 வரை ஒல்லாந்தரினாலும் 1796-1948 வரை ஆங்கிலேயரினாலும் ஆட்சி செய்யப்பட்டது.

போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரை பொறுத்த வரை அவர்கள் பெரும்பாலும் அரசியலில் ஈடுபாடு காட்டவில்லை. இவர்கள் இலங்கையில் பொருளாதாரத்தை பெற்றுக்கொள்ள எத்தனித்தார்களே தவிர, அரசியலில் எந்தவொரு திட்டமிட்ட ஏற்பாட்டினையும் வழங்கவில்லை. இந்த நிலையில் ஓர் அரசியல் அமைப்பின் கீழ் இலங்கை ஆட்சிமுறையை உருவாக்கிய நாடாக பிரித்தானியாவைக் குறிப்பிடலாம்.

இன்றைய காலகட்டத்தில் ஒரு நாட்டுக்கு தேவையான சட்டத்தை இயற்றி நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்து நாட்டை சிறப்பாக நிர்வாகிப்பதற்கு நிருவாகத்துறைக்கு பக்கபலமாய் சட்டத்துறை காணப்படுகிறது. இலங்கையின் சட்டத்துறையினது வரலாறு நீண்டதாயினும் பிரதிநிதித்துவ சட்டத்துறையின் (சட்ட மன்றம் அல்லது பாராளுமன்றம்) வரலாறு குறுகியதே.

1802 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்த பின் பிரித்தானிய இலங்கை (British Ceylon) என் அழைக்கப்பட்டது. ஆங்கிலேயர் இலங்கை அரசியலில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். இந்த வகையில் இலங்கையில் ஆங்கிலேயரே அரசியல் யாப்பினை முதலில் இலங்கைக்கு அறிமுகம் செய்தவர்கள் ஆவார்கள். 1833 ஆம் ஆண்டு வரை ஆளுநர் கையில் இருந்த அதிகாரம் 1833 இற்கு பின் சட்டவாக்கச் சபை மற்றும் வாக்குரிமை மூலம் படிப்படியாக மக்கள் கைக்கு மாறத் தொடங்கியது.

இந் நாட்டின் தேர்தல்முறை அதன் வரலாற்று, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளோடு பிணைந்த பல்வேறு காரணிகளின் அழுத்தம் காரணமாக உருவானதும் மக்களின் தேவைகளுக்கேற்ப அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதுமான ஒரு முறையென அழைக்கமுடியும்.

### இலங்கையில் ஆங்கிலேயரினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்கள்

இலங்கையில் ஆங்கிலேயரினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்கள்- (1) கோல்புறுக்-கமறன் (1833), (2) குறுமக்கலம் (1910), (3)மனிங் (1921), (4) மனிங்-டிவன்சயர் (1924), (5) டொனமூர் (1931), (6)சோல்பரி (1947)

### இலங்கையரினால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள்

சுதந்திரத்திற்கு பின் இலங்கையரினால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள்.

(i) 1 ஆம் குடியரசு அரசியல் அமைப்பு (1972)

(ii) 2 ஆம் குடியரசு அரசியல் அமைப்பு (1978)

### சட்டமன்றத்தின் வெவ்வேறு பெயர்கள்

இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கேற்ப இலங்கைப் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றம் காலத்துக் காலம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இலங்கைச் சட்டவாக்கச்சபை (Legislative Council of Ceylon, 1833-1931) எனப்பெயர் பெற்று பின்னர் இலங்கை அரச சபை (State Council of Ceylon, 1931-1947), இலங்கைப் பாராளுமன்றம் (Parliament of Ceylon, 1947-1972), அதன்பின்னர் தேசிய அரசு பேரவை (National State Assembly, 1972-1978) ஆக மாறி இப்போது இலங்கைப் பாராளுமன்றம் (Parliament of Sri Lanka 1978-present) என அழைக்கப்படுகின்றது.

### (1) கோல்புறூக்-கமிறன் சீர் திருத்தம்.

சட்ட ஆட்சியின் அடிப்படையிலான உபயோகத்தன்மை மிக்கதும் தாராளவாதத்தன்மை உடையதுமான அரசியல் கலாசாரமொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் கமிறன் அரசியலமைப்புத் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இது உயர்நிலப் பிரதேசங்கள், கரையோர மாகாணங்கள் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்த ஒரு தனி அலகு கொண்ட அரசாங்கத்தை அறிமுகப்படுத்தியது. இதன்மூலம் பிரதிநிதிகள் சட்டவாக்கத்திற்கு வழியமைக்கும் விதத்தில் ஒரு நிறைவேற்றுசபையும் (Executive Council) ஒரு சட்டவாக்க சபையும்(Legislative Council) ஸ்தாபிக்கப்பட்டன.

பிரித்தானியர்களினால் இலங்கை சிவில்சேவை, நவீன சட்ட, கல்வி மற்றும் வைத்திய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன.

19 ஆம்நூற்றாண்டின் இறுதியில் மேலைத்தேய கல்விகற்ற இலங்கையர் ஒரு வகுப்பினராக உருவெடுத்தனர். இந்நாட்டின் சனத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல்வேறு இனக்குழுமங்களிலிருந்து உருவெடுத்த புதிய தலைவர்கள் தேசியவாத அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இலங்கைச் சட்டவாக்கக் கழகத்தோடு இணைந்து கொண்டனர். அக்காலப்பகுதியில் அதாவது 20 ஆம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப் தங்களிலும் அனைத்து இனக்குழுமங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களிடையே ஒப்பற்ற ஐக்கியம் நிலவியது. இவ்வொற்றுமை பிற்பட்டகாலத்தில் வலுவிழக்கத் தொடங்கியது.

### கோல்புறூக் (1833) அரசியல் யாப்பின்படி சட்டமன்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கை

கோல்புறூக் அரசியல் யாப்பின் படி 1833 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டவாக்கப் பேரவையில் ஆளுநர் உட்பட 10 பதவிநிலை பெற்ற அங்கத்தவர்களும் (உத்தியோக சார்புள்ளோர்) பதவி நிலை பெறா அங்கத்தவர்களாக (உத்தியோக சார்பற்றோர்) 3 ஐரோப்பியரும் 1 சிங்களவரும் 1 தமிழரும் 1 பறங்கியரும் உள்ளடங்க மொத்தமாக (ஆளுநர் உட்பட) 16 அங்கத்தவர்கள் இருந்தார்கள். இவர்கள் யாவரும் (15 அங்கத்தவர்கள்) ஆளுநரால் நியமிக்கப்பட்டார்கள். இதில் சிங்களவர் : தமிழர் : முஸ்லீம் விகிதம் = 1 :1 :0 ஆக இருந்தது.

### 1889 இல் சட்டமன்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படல்

1889 இல் சட்டவாக்கப் பேரவையில் உள்ள பதவிநிலை பெறா அங்கத்தவர்களின் எண்ணிக்கை 6 இல் இருந்து 8 ஆக அதிகரிக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட இரண்டும் முஸ்லீம் மற்றும் கண்டிச் சிங்களவருக்கு வழங்கப்பட்டது. 1889 இல் சட்டவாக்கப் பேரவையில் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை (ஆளுநர் உட்பட) 18 ஆகியது. இதில் சிங்களவர் : தமிழர் : முஸ்லீம் விகிதம் = 2 :1 :1 ஆக இருந்தது.

### இலங்கையின் நிறைவேற்றுப் பேரவை பற்றி......

இலங்கையின் சட்ட நிர்வாக சபை அல்லது நிறைவேற்றுப் பேரவை (Executive Council of Ceylon) என்பது கோல்புறூக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் படி, பிரித்தானிய இலங்கையில் (இன்றைய இலங்கை) பிரித்தானிய காலனித்துவ நிர்வாகத்தினால் 1833, மார்ச் 13 ஆம் நாள் இலங்கை சட்டவாக்கச் சபையுடன் இணைந்து அமைக்கப்பட்ட ஒரு நிறைவேற்றுப் பேரவை ஆகும்.

இப்பேரவை ஆளுநரின் தலைமையின் கீழ் ஆளுநரினால் நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழுவாகும். காலனித்துவச் செயலாளர், சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம், பொருளாளர், மற்றும் இலங்கைக்கான படைத்துறை அதிகாரி ஆகிய ஐந்து அரசுப் பதவிகளில் உள்ளோர் இப்பேரவையில் உறுப்பினர்களாக இருந்தனர்.

நிறைவேற்றுப் பேரவை மொத்த இலங்கையின் நிறைவேற்று அதிகாரம், மற்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கல் போன்ற அலுவல்களைக் கவனித்தது. முதலாவது மனிங் சீர்திருத்தத்தை அடுத்து மூன்று அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்களும் நிறைவேற்றுப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இலங்கையின் நிறைவேற்று சபையானது 1931 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கையின் அமைச் சர்கள் சபையாக மாற்றப்பட்டது.

### (2)குறுமக்கலம் ஆணைக்குழுவின் யாப்பின்படி சட்டமன்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கை (1910 - 1920)

சுமார் 77 ஆண்டு காலம் செயற்பட்ட கோல்புறூக் அரசியலமைப்பு, படித்த இலங்கையரின் வேண்டுகோள்களுக்கிணங்க 1910 அல் குறுமக்கலம் ஆணைக்குழுவினால் மறுசீரமைக்கப்பட்டு, அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்பட்டதோடு, பதவி நிலை பெறா அங்கத்தவர்களின் எண்ணிக்கை 8 இல் இருந்து 10 ஆக அதிகரிக்கப்பட்டது. இப் பரிந்துரை 1912 இல் இருந்து அமுலாக்கப்பட்டது.

குறுமக்கலம் அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கையில் வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அல்லது கற்றோருக்கான வாக்குரிமை என அழைக்கப்பட்டது. (இது கல்வி அறிவு, சொத்து உள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது). இவ் அரசியல் அமைப்பின்படி தெரிவு செய்யப்படக் கூடிய சிங்களவர் : தமிழர் : முஸ்லீம் விகிதம் = 3 :2 :1 ஆகும். இதைவிட படித்த இலங்கையருக்கு ஒரு ஆசனம் ஒதுக்கப்பட்டது.

சட்டவாக்கச்சபையில் இருந்த 10 பதவிநிலை பெறா (உத்தியோக சார் பற்ற) உறுப்பினர்களில் நால்வர் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில் 2 ஐரோப்பியர், 1 பறங்கியர், 1 படித்த இலங்கையர் அடங்கும்.

இவ் அரசியல் அமைப்பின்படி 1911 மற்றும் 1917 களில் தேர்தல்கள் நடைபெற்றன. 1911 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற முதலாவது சட்டவாக்கச்சபைத் தேர்தலில் படித்த இலங்கையருக்கான தேர்தலில் சேர்.பொன் இராமநாதன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தாழ்நிலச் சிங்களவரான டாக்டர் மாக்கஸ் பெர்ணந்துவை தோற்கடித்து முதல் சிறுபான்மைப் பிரதிநிதியாக வெற்றி பெற்றார்.

சேர்.பொன் இராமநாதன் வெற்றி பெறுவதற்கு சிங்கள மக்களிடையே இனவாதத்தை விட சாதிவாதம் மேலோங்கியிருந்ததும் ஒரு காரணமாக விருந்தது. உயர்சாதிச் சிங்களவர்கள் கரையோர சிங்களவருக்கு வாக்களிக்காது சேர் பொன் இராமநாதனுக்கு வாக்களித்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்...

கிறது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்யும் பொருட்டு வவுனியாவில் தெரிவுக்குழு கூடவுள்ளது. (ம-7)

## புலிகளின்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் உள்ள இளம் ஒளி விளையாட்டு மைதானத்தில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து அந்த இடத்திலே அகழ்வுப் பணி இடம்பெற்று வருகிறது.

கொழும்பு நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப் பணியானது கொழும்பில் இருந்து வருகைதந்த பொலிஸ் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஏற்றுக்...

ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

தபாலில் ஏற்படக்கூடிய காலதாமதங்களையும் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் போது ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்க்கும் நோக்கில் எதிர்வரும் 09 மற்றும் 10 ஆகிய இரு தினங்களிலும், பூரணப்படுத்திய தபால் வாக்கு விண்ணப்பங்களை தபாலுக்கு ஒப்படைப்பதைத் தவிர்த்து, அவற்றை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக வேறுபடுத்தி வெவ்வேறு கடிதவுறைகளில் இட்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் சிறந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எந்தக் காரணத்திற்காகவும் இந்தத் திகதி இனிமேல் நீடிக்கப்படமாட்டாது என்பதையும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## 10 இலட்சம்...

ளார்.

இந்நிலையில் வீதியால் சென்றவர்கள் அந்தப்பணத்தினை எடுத்துச்சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

இதுகுறித்து சந்தேகநபரின் மனைவி வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் 42 வயதுடைய, 3 பிள்ளையின் தந்தையான குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தமிழ் மக்கள்...

சியைச் சேர்ந்த இரண்டு பிரமுகர்கள், ஒரு முன்னாள் பெண் போராளி, யாழ் மாநகர சபை முன்னாள் மேயர் மணிவண்ணன், கட்டிடக் கலைஞர் தவச்செல்வம் சிற்பரன் உட்பட இளையோர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் வேட்பாளர் பட்டியல்களைத் தயாரிக்கும் பணிகளிலும் கட்சிப் பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளதாக அறியவருகின்றது. (ம-7)

## ஐ.நா தீர்மானம்...

எனினும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளிற்குத் தீர்வைக் காண்பது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

இலங்கை மனித உரிமை பேரவையுடனும், வழமையான மனித உரிமை பொறிமுறையுடனும், தொடர்ந்தும் ஒத்துழைப்பு அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கின்றது.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் தெரிவுசெய்யப்படவுள்ளது தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத் நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை ஜெனிவா விற்கு தெரியப்படுத்துவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

எனினும் இதற்குக் காலம் தேவை, நாளை ஜெனிவாவில் இந்த நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம்என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## குற்றவாளி...

களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிக்க விசேட தலைமீட்டை ஆரம்பித்துள்ளோம். அதற்காக இடம்பெற்ற விசாரணைகளின் ஊடாக இந்த அறிக்கை காணாமல் போனது எப்படி? அவற்றின் பக்கங்கள் எவ்வாறு தொலைந்து போனது என்பது தொடர்பில் விசாரித்து வருகிறோம்.

ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில், முன்னாள் சட்டப் பணிப்பாளர் தலைமையிட்டு தான் இந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கியிருந்தார். அப்படியானால் அந்த அறிக்கையின் சில பகுதிகள் எப்படி தொலைந்து போனது? ஒப்படைக்கும்போது இருந்தனவா? அதன் பிறகு என்ன நடந்தது? இதையெல்லாம் இந்த ஆய்வுக் குழு விசாரித்து வருகிறது.

எனவே இந்நாட்டு மக்களுக்கு எந்த அநீதியும் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை இவ்வாறு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

## நாட்...

நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும்

ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது.

இவ்வாறான போர்ச் சூழல் ஏற்படும் போது எரிபொருட்களின் விலைகள் அதிகரிப்பது வழமையானதாகும். எனவே உலக சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரித்தால், அது இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆனால் தற்போது அவ்வாறு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் தான் தற்போது உபயோகப்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்துக்கு அவற்றை உபயோகிக்க முடியும்.

அவற்றின் சராசரியான விலைகளே தற்போது நடைமுறையிலுள்ளன. போர்ச் சூழல் உக்கிரமடைந்து விலைகள் அதிகரித்தால், அவற்றுக்கேற்ப இலங்கையிலும் எரிபொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படும். தற்போது எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்றார். (ம-7)


මහජන සම්පත — திகதி 2024.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 5619 — S 9 7 5 3 3 0 — අත සම්පත S 5 3 3 0 — சீட்டிழுப்பு இலக்கம் 194

தன நிதானய — திகதி - 2024.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் - 1649 — X 06 39 40 69 X — 75047

மெகா பவர் — திகதி 08/10/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1967 — H 15 10 54 66 67 — 22192

லக்கி 7 VIP — திகதி 2024.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 0445 — A 2 3 0 8 7 7 A

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3861 — சீட்டிழுப்பு திகதி 08.10.2024 — R 41 42 52 55 — R 70419

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.10.08 — சீட்டிழுப்பு இலக்கம் 928 — மீனம் 02 11 19 27 மீனம் — 53484 — 26

உத்தியோகபூர்வ முடிவுகள் — 08.10.2024 — வெற்றி வாரம் 327 — வர்ணம் சிவப்பு — T 5 4 3 7 2 8 — 44243 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,411,496.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2593 — வர்ணம் வெளிர் நீலம் — சீட்டிழுப்பு திகதி 08.10.2024 — தினம் செவ்வாய் — 10 14 70 74 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,928,940.00

சனிதா — திகதி 2024.10.08 — வெற்றி வாரம் 4754 — வர்ணம் பச்சை — 16 33 65 68 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,408,629.60 — 89027

சசிரி — வெற்றி வாரம் 538 — சீட்டிழுப்பு திகதி 2024.10.08 — 09 20 43 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,534,880/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4305 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2024.10.08 — தினம் செவ்வாய்க்கிழமை — 11 18 30 39 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,318,234.80 — 177603

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — H 13 16 26 33 37 — 1769 — 08.10.2024 செவ்வாய் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 549,286,639.40

அத கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் : 2419 — சீட்டிழுப்பு திகதி : 2024.10.08 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,875,908.80 — 27 46 48 61 O — 232880


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீர் ஓடையில் தவறி வீழ்ந்த சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

தங்கொட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேகட பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றின் பின்புறத்தில் உள்ள ஓடையில் தவறி வீழ்ந்து சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக தங்கொட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கொட்டுவ, வேகட பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமி முன்பள்ளிக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பியுள்ள நிலையில் சிறுமியின் பாட்டி, சிறுமியைக் குளிப்பாட்டுவதற்காக நீரை ஆயத்தம் செய்து கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, இந்த சிறுமி வீட்டின் பின்புறத்திற்குச் சென்றுள்ள நிலையில் ஓடையில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்கொட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# திருகோணமலையில் விகாரை மைதானத்தில் ஆணின் சடலம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் பௌத்த மதஸ்தலம் ஒன்றின் மைதானத்தில் கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - நான்காம் கட்டை பகுதியில் அமைந்துள்ள சிறி விஜயராம பௌத்த மதஸ்தலத்தின் மைதானத்தில் நேற்று காலை குறித்த சடலம் உப்புவெளி பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் திருகோணமலை, சர்தாபுரத்தைச் சேர்ந்த 41 வயதான அமரசிங்க ஆராச்சிகே சுமித் என்பவர் என தெரியவந்துள்ளது.

சடலத்தைப் பரிசோதனை செய்த திருகோணமலை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி இது கொலையாக இருக்கலாம் எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சட்ட வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# புறக்கோட்டையில் பாரிய தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு - புறக்கோட்டையில் அமைந்துள்ள அடுக்குமாடி கட்டிடமொன்றில் பாரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

மெலிபன் வீதியில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின், களஞ்சியசாலையாகப் பயன்படுத்தப்பட்ட மூன்றாவது மாடியில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கொழும்பு மாநகரசபையின் ஏழு தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டதுடன், தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# அரசியலமைப்புப் பேரவை பொலிஸ்மா அதிபரின் நியமனத்துக்கு அங்கீகாரம்

பதில் பொலிஸ் மா அதிபரின் நியமனத்துக்கு அரசியலமைப்புப் பேரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உச்சநீதிமன்ற நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பதவி விலக்கப்பட்ட நிலையில், குறித்த வெற்றிடத்துக்கு பிரியந்த வீரசூரிய பதில் பொலிஸ் மா அதிபராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பதில் பொலிஸ்மா அதிபர் பதவியில் ஒருவர் 14 நாட்களுக்கு மேல் நீடித்திருப்பதாயின் அதற்கு அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரம் தேவை என்பதன் அடிப்படையில் பிரியந்த வீரசூரியவின் நியமனம் தொடர்பான சிபாரிசு ஜனாதிபதியினால் அரசியலமைப்புப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் நேற்றைய தினம் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய அரசியலமைப்புப் பேரவை பிரியந்த வீரசூரிய, பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (ம-7)

## இராஜதந்திர...

யாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாம் எந்த நாட்டையும் சிறப்பானதாகக் கருதவில்லை. நாடு சிறியதோ பெரியதோ, அனைத்து நாடுகளுடனும் இலங்கை இராஜதந்திர உறவுகளைப் பேணுகிறது.

எங்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லை. சீனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, கியூபா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளோம்.

இந்தியாவைப் போலவே சீனாவையும் கையாளுகிறோம். சீனா ஊடாக விகாரைகளுக்கு சோலார் பேனல்களை வழங்கும் திட்டம் உள்ளது. அத்துடன் இன்னும் சில தினங்களில் சீன இராணுவப் பயிற்சிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

அதற்கான அனுமதியை வழங்கியுள்ளோம். இதனால் இலங்கையின் பாதுகாப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

முன்னதாக, அமெரிக்க, இந்திய மற்றும் ஜேர்மன் போர்க்கப்பல்கள் வந்துள்ளன. இதுபோன்ற இராஜதந்திர உறவுகளில், அனைத்து நாடுகளுடனும் சமமாக நடந்து கொள்கிறோம் இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

## ரணில்...

இது தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அமைச்சரவை அங்கீகாரத்துக்கமைய ஜனாதிபதி செயலகத்தின் கீழ் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் விவகார செயலகம், பங்கேற்பு ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கான மக்கள் சபை முறையை நிறுவுவதற்கான தேசிய மக்கள் சபை செயலகம் மற்றும் விவசாய நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்கள்/ ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த அலுவலகங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் கருமங்களை தொடர்புடைய அமைச்சுக்கள் ஊடாக அமுல்படுத்தவதற்கான இயலுமை இருப்பதனால் அதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள்/ ஆலோசகர்களின் சேவையை 2024.09.30 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1360)

076 825 7716 (ஆகாஸ்)



யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (411)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



அகரம்

உயர்நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு -2024

புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

12.10.2024 (சனிக்கிழமை)

விஜயதசமி நன்னாள் அன்று மாலை 3.02 - 4.32

அனுமதிகளை 09.10.2024 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு : ஆரம்பிக்கும் நாள் முதல் தைமாதம் வரை நடைபெறும் வகுப்புக்களிற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டா! (2251)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"



விற்பனைக்கு உண்டு

- 5 அடி உயரமுள்ள மெட்ராஸ் குத்து விளக்கு ஒரு சோடி
- NIKON D - 5500 கமரா 55 - 200 mm Lans
  5 PEEDLITE - VN568EX
- I7 8700 computer
  32 GB RAM, 1 TB SSD, 300W power Supply,
  DVD - ROM, ORIGINAL Set Video Edit செய்ய உகந்தது.

(2236)

077 154 6757



காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்

- 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட 20 அடிப் பாதையுடன்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2243)

077 288 0152, 076 739 0413



விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு : (402)

075 033 6759



அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2026ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

0768226244

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2024

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

0777469777, 0743900350, 0743900352, 0768226237, 0743900353, 0743900351, 0764550673, 0768226240, 0777066777, 0764550675, 0768226242, 0768226238, 0764550670, 0777718322, 0777726322, 0764550674, 0764550671, 0777720322, 0776699892, 0743900353, 0768226230, 0776697960

V2 Travels


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன [illegible] ம் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org